# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

(தேசிய மதிப்பீட்டுத் தரநிணயக் குழுவின் மதிப்பீட்டில் "A" தரச்சான்றிதழ் இரண்டாம் சுற்றில் பெற்றது)

பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி – 620 024

**முனைவர் க. துரையரசன் எம்.ஏ.,எம்.எட்.,எம்.பில்.,பிஎச்.டி.,**
தேர்வு நெறியாளர்

தொலைபேசி : 0431-2407016,2407060
தொலைநகலி : 0431-2407444
மின்னஞ்சல் : coe@bdu.ac.in
வலைதளம் : www.bdu.ac.in


---

**ந.க.எண்.தே.பி/இளநிலை/தேர்வுகள் / நவம்பர் 2018 நாள்: 18.9.2018**

**பெறுநர்**

புறத்தேர்வாளர்கள் / செய்முறைத் தேர்வு
பல்கலைக்கழக இணைவுபெற்ற அனைத்துக் கல்லூரிகள்,(தன்னாட்சி பெறாத கல்லூரிகள்)

அய்யா/ அம்மையீர்,

**பொருள்: செய்முறைத் தேர்வில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தெரிவிப்பது - தொடர்பாக.**

-----

நவம்பர் 2018 செய்முறைத் தேர்வின் போது கீழ்க்கண்ட நடைமுறைகளைத் தவறாது பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

1. புறத்தேர்வாளர் நியமிக்கப்பட்ட கல்லூரிக்கு காலை 10.30 வரை செல்லாத நிலையில் தன்னிச்சையாக கல்லூரிகள் புறத்தேர்வாளர்களை நியமிப்பதைத் தவிர்க்க வேண்டும். உடன் தேர்வு நெறியாளருக்குத் தெரிவித்து, தேர்வு நெறியாளரின் அனுமதியின் பேரில் வேறு புறத்தேர்வாளர் நியமனம் செய்து அதன் பிறகே தேர்வு நடத்திட வேண்டும்.
2. கல்லூரியிலிருந்து பெறப்படும் செய்முறைத் தேர்வு மதிப்பெண் பட்டியல் (Hard Copy), அக மற்றும் புறத் தேர்வாளார்கள் கையொப்பம் மற்றும் தேதியுடன் கல்லூரி முதல்வரின் பரிந்துரை பெற்று அனுப்ப வேண்டும். செய்முறைத்தேர்வு முடிந்த மறுநாளே மதிப்பெண் பட்டியல், வருகைப்பதிவேடு ஆகியவை தேர்வு நெறியாளருக்கு அனுப்பப்பட வேண்டும்.
3. கல்லூரியிலிருந்து முதன்முதலாக அனுப்பப்படும் செய்முறைத்தேர்வு மதிப்பெண் பட்டியல்/ அகமதிப்பெண் பட்டியல்கள் தான் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். தவறுகள் நேர்ந்ததாகக் கூறி பின்னர் பெறப்படும் மதிப்பெண் பட்டியல்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
4. செய்முறைத்தேர்வு மதிப்பெண்கள் 13.10.2018 லிருந்து 20-10-2018 வரை Portal-ல் பதிவேற்றம் (Upload} செய்வதற்கு அனுமதிக்கப்படுகிறது. செய்முறைத்தேர்வு மதிப்பெண்கள் Portal – ல் பதிவேற்றம் (Upload) செய்வதற்கும் Hard Copy-ல் குறிப்பிடும் மதிப்பெண்களுக்கும் வேற்றுமை இருக்குமாயின், Hard Copy –ல் உள்ள மதிப்பெண்களே சரியானதாக கருதி ஏற்றுக்கொள்ளப்படும். Portal-ல் உள்ளது பரிசீலிக்கப்படமாட்டாது.

நவம்பர் 2018 செய்முறைத் தேர்வு சிறப்பாக நடைபெற தங்களது முழு ஒத்துழைப்பை நல்குமாறும் இக்கடிதம் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகை அளிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள

**தேர்வு நெறியாளர்**